
# நியூ சவுத் வேல்ஸ் குடியேற்ற உத்தி: **அகதியராய் வாழ்ந்த அனுபவக் கட்டமைப்பு**

அகதியராய் வாழ்ந்த அனுபவமுள்ள மக்களுக்கு அவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் முடிவுகளில் குரல் கொடுப்பதை, பல்கலாச்சார நியூ சவுத் வேல்ஸ் நோக்கமாகக் கொண்டுள்ளது - இது நியூ சவுத் வேல்ஸ் குடியேற்ற உத்தியின் நோக்கங்களில் ஒன்றாகும்.

அகதியராய் வாழ்ந்த அனுபவக் கட்டமைப்பு பல்கலாச்சார நியூ சவுத் வேல்சுக்கு வழிகாட்டும், இதன் மூலம் அகதியராய் வாழ்ந்த அனுபவத்தை அர்த்தமுள்ள வழிகளில் சேர்க்கலாம் மற்றும் நியூ சவுத் வேல்ஸில் வாழும் மக்களுக்கான குடியேற்ற பலன்களை மேம்படுத்தலாம்.




## கட்டமைப்பு மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது

### 1. வழிகாட்டும் கோட்பாடுகள்

» **மரியாதை:** அகதியர் வாழ்ந்த அனுபவத்தைச் சிறப்புத் திறன் என்று மதிப்பிடுதல் மற்றும் பங்களித்த அனைவரையும் அங்கீகரித்தல்.

» **கூட்டாண்மை:** முடிவெடுப்பதில் சுறுசுறுப்பான மற்றும் சமமான கூட்டாளிகளாக அகதியர் வாழ்ந்த அனுபவமுள்ள மக்களுடன் இணைந்து பணியாற்றுதல்.

» **பாதுகாப்பு:** மக்கள் பாதுகாப்பாக இருக்கும் உணர்வை உறுதி செய்தல். ஒவ்வொரு நபரின் வெவ்வேறு தேவைகளையும் அனுபவங்களையும் கருத்தில் கொண்டு உடல் ரீதியான, உணர்வு ரீதியான மற்றும் கலாச்சார ரீதியான பாதுகாப்பு இதில் அடங்கும்.

» **உள்ளடக்கம்:** ஒவ்வொரு நபருக்கும் தனிப்பட்ட குணாதிசயங்கள் இருப்பதை அங்கீகரித்தல், ஒவ்வொருவரின் வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கேட்டல், மற்றும் மக்கள் பங்கேற்பதைத் தடுக்கும் தடைகளை நீக்குதல்.

### 2. செயல்முறைகள் மற்றும் அணுகுமுறைகள்

நல்ல ஈடுபாடு எப்படி இருக்கும் என்பதற்கான நடைமுறை எடுத்துக்காட்டுகள், இது பற்றிய தகவல்களுடன்:

- **பரிசீலனைகள்:** திட்டமிடல் செயல்பாட்டின் போது கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய முக்கிய காரியங்கள்.
- **தகவமைதல்கள்:** சவால்களை முறியடிக்கப் பல்வேறு வழிகளில் வேலை செய்தல்.
- **செயல்படுத்துபவர்கள்:** அனைத்து நிலைகளிலும் ஈடுபாட்டு நடவடிக்கைகளை ஆதரிக்கும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.

### 3. கருவிகள் மற்றும் ஆதாரவளங்கள்

நல்ல ஈடுபாட்டு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு மற்றும் வழிநடத்துவதற்கு உதவிடும் வழிகாட்டிகள் மற்றும் பிற ஆதாரவளங்கள்.



## ஈடுபடுங்கள்

கட்டமைப்பைப் பற்றி மேலும் அறிய அல்லது அதில் ஈடுபட, க்யூ. ஆர். குறியீட்டை (QR code) அலகீடு (ஸ்கேன்) செய்யவும் அல்லது பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும் https://multicultural.nsw.gov.au/settlement/